**சுருக்கம்**

நாகர்கோவில் மாநகராட்சி – நாகர்கோவில் மாநகராட்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள 2 பேரூராட்சிகயை இணைத்து நாகர்கோவில் மாநகராட்சி எல்லைகளை விரிவாக்கம் செய்தல் – உத்தேச முடிவு –ஆணைகள் –வெளியிடப்படுகிறது.

----------------------------------------------------------------------

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண்.84 நாள்: 14.10.2021**

**படிக்கப்பட்டது:**

1. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் கடிதம் ந.க..எண். எப்.1/7879/2021 நாள். 22.9.2021.
2. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் கடிதம் ந.க.எண்.எப்.1/7879/2021 நாள். 22.9.2021
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.20782/2021/மாநஅ–1, நாள்.27.9.2021.

******

**ஆணை :**

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

"2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021 ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது"

2. இதன்படி, "நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள பேரூராட்சிகளையும் ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

3. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர், நாகர்கோவில் மாநகராட்சியை எல்லை விரிவாக்கம் செய்வது தொடர்பான மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது செயற்குறிப்பில், கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராக அமைந்துள்ள நாகர்கோவில் 49.10 கிலோ மீட்டர் பரப்பளவுடன், சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வந்த நிலையில்,

01.03.2019 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, எல்லை விரிவாக்கம் செய்யப்படாமல் 49.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடனே செயல்பட்டு வருவதாகவும், நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 396 நாள் 21.09.2021 மற்றும் பேரூராட்சிகள், ஊராட்சிகளின் மன்ற தீர்மானங்களின்படி கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2 பேரூராட்சிகள், 6 ஊராட்சிகளை முழுமையாகவும், 2 ஊராட்சிகளை பகுதியாகவும் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| **வ. எண்** | **உள்ளாட்சி அமைப்பு** | **உள்ளாட்சி அமைப்பு முழுமையாக அல்லது பகுதியாக இணைக்கப்படுகிறதா மற்றும் அதன் விவரம்** |
|---|---|---|
| 1 | தெங்கம்புதூர் பேரூராட்சி | முழுமையாக |
| 2 | ஆளூர் பேரூராட்சி | முழுமையாக |
| 3 | புத்தேரி ஊராட்சி | முழுமையாக |
| 4 | திருப்பதிசாரம் ஊராட்சி | முழுமையாக |
| 5 | பீமநகரி ஊராட்சி | முழுமையாக |
| 6 | தேரேகால் புதூர் ஊராட்சி | முழுமையாக |
| 7 | மேல சங்கரன்குழி ஊராட்சி | முழுமையாக |
| 8 | கணியாகுளம் ஊராட்சி | முழுமையாக |
| 9 | தர்மபுரம் ஊராட்சி | பகுதியாக |
| 10 | இராஜக்கமங்கலம் ஊராட்சி | பகுதியாக |

**4.** மேலும், நாகர்கோவில் மாநகராட்சி எல்கைகளை ஒட்டி அமைந்துள்ள வளர்ந்து வரும் மேற்கண்ட பகுதிகள் திட்டமிடப்படாத வளர்ச்சி பெற்றுள்ள நிலையில் இவற்றை நாகர்கோவில் மாநகராட்சியுடன் இணைத்தால் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உதவும் என்பதாலும் ஒருங்கிணைந்த நாகர்கோவில் மாநகராட்சியை சுற்றியுள்ள இப்பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும், அவற்றிற்கான நிதி ஆதாரங்களை தேசிய அளவில் பெறுவதற்கு ஏதுவான சூழலும் ஏற்படும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**5.** இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் அமைந்துள்ள கல்வி, மருத்துவம் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து கூடுதல் வருவாய் மாநகராட்சிக்கு கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு செல்லும் புறவழிச் சாலைகள் மற்றும் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள நாகர்கோவில் நகர இரயில்வே நிலையம் ஆகியவை செயல்பாட்டுக்கு வரும் நிலையில் போக்குவரத்து வசதிகள் பெருகி நகரம் துரிதமாக வளர்ச்சி அடைய ஏதுவாகிறது எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**6.** நாகர்கோவில் மாநகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்வதற்கான மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பினை நகராட்சி நிருவாக இயக்குநர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தமது செயற்குறிப்பில் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

**7.** அரசு இச்செயற்குறிப்பின் மீதான கவனமான பரிசீலனைக்குப் பின்னர் நகராட்சி நிருவாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, நாகர்கேவில் மாநகராட்சியுடன் தெங்கம்புதூர் பேரூராட்சி மற்றும் ஆளூர் பேரூராட்சியை இணைத்து மாநகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்ய உத்தேச முடிவு மேற்கொண்டு அவ்வாறே ஆணையிடுகிறது.

இதனடிப்படையில், உத்தேச விரிவுபடுத்தப்படும் நாகர்கோவில் மாநகராட்சிக்கான வார்டு எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு மாநகராட்சி மன்றத்திற்கான அடுத்த சாதாரண தேர்தல் நடத்தப்படும்.

**8.** இதனடிப்படையில், 2019–ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (1)ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3–ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ், இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (ஆங்கிலத்திலும், தமிழிலும்), 14.10.2021ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

9. பரிந்துரைக்கப்பட்ட ஊராட்சிகளை இணைப்பது (Inclusion) தொடர்பாக பின்னர் தனியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:-**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-79 (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை-28.
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சி தலைவர்.
நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர்
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்,
(மாவட்ட ஆட்சி தலைவர் வழியாக)

**நகல்:-**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை-106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5 மற்றும் அ.ந.2) துறை, சென்னை-09.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**சார்புச் செயலாளர்**

**APPENDIX.**

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the first proviso to sub-section (1) of section 3 of the Nagercoil City Municipal Corporation Act, 2019 (Tamil Nadu Act of 11 of 2019). the Governor of Tamil Nadu after consultation with the Municipal Corporation of Nagercoil, proposes to alter the limits of the city of Nagercoil so as to include therin the areas comprised in the following local authorities:-

| Sl. No. | Name of the local authorities | Whether full or part of the area of the local authority proposed to be included |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | Thengampudur Town Panchayat | Full |
| 2 | Aloor Town Panchayat | Full |

Based on the above alteration, wards will be divided for the next ordinary election.

2. Any inhabitant of the said local areas or tax payer of the Corporation, who desires to object to the proposal, may submit his objection in writing to the Government of Tamil Nadu within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette. Objections, if any, in writing should be addressed to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St. George, Chennai – 600 009.

**அறிவிக்கை**

2019-ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/2019) 3-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் முதல் வரம்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், நாகர்கோவில் மாநகராட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழ்க்காணும் உள்ளாட்சியின் பரப்பிடம் முழுமையாக நாகர்கோவில் மாநகருக்குள் உள்ளடக்குவதற்கென நாகர்கோவில் மாநகரின் எல்லை வரம்புகளை இதன் மூலம் மாற்றியமைக்கிறார்:-

| வ. எண் | உள்ளாட்சி அமைப்புகளின் பெயர் | உள்ளாட்சி அமைப்பு முழுமையாக அல்லது பகுதியாக இணைக்கப்படுகிறதா மற்றும் அதன் விவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | தெங்கம்புதூர் பேரூராட்சி | முழுமையாக |
| 2 | ஆளூர் பேரூராட்சி | முழுமையாக |

மேற்கண்ட மாற்றத்தின் அடிப்படையில் அடுத்த சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

2. உத்தேச மாற்றம் இவ்வறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து 6 வார காலம் முடிவுற்றப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், எழுத்து வடிவில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-09 அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**Under Secretary**